**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை – 600 006**

**மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள்**

ந.க.எண்: 1077/A11/பமேகு/ஒபக/2025, நாள். 15/07/2025

**பொருள்:** ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – பள்ளி மேலாண்மைக் குழு – அனைத்து வகை அரசுப் பள்ளிகளில் பள்ளி மேலாண்மை குழு கூட்டம் – **25.07.2025 (வெள்ளிக் கிழமை)** நடத்துதல் - கூட்டப் பொருள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்குதல் – சார்பு.

**பார்வை:** (1)அரசாணை (நிலை) எண்.144, பள்ளிக் கல்வித் (அகஇ2) துறை, நாள். 28/06/2024

(2) பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர்களின் இணை செயல்முறைகள், ந. க. எண். 9111 / கே 2 / 2025 , நாள்:03.07.2025

(3) பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர்களின் இணை செயல்முறைகள் , ந. க. எண். 012381/ ஜெ2 / 2025 , நாள்:11.07.2025

**********

பார்வை-(1)ன்படி அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பானது 2024 ஆகஸ்ட் மாதத்தில் நான்கு கட்டங்களாக நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய உறுப்பினர்களைக் கொண்ட முதல் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டமானது அக்டோபர் -2024 இல் நடத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

பார்வை–2 & 3-இன்படி பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் மாணவர்களின் வளர்ச்சிக்கும், பள்ளியின் முன்னேற்றத்தில் பங்களிக்கும் வகையில் மாதம் தோறும் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம் நடத்தப்படும். 2025-2026ஆம் கல்வியாண்டின் முதல் பள்ளி மேலாண்மைக் குழுவின் கூட்டமானது அனைத்து வகை அரசுப்பள்ளிகளிலும் **25.07.2025 வெள்ளிக்கிழமை மாலை 03.00 முதல் 04.30 மணி வரை** கீழ்காண் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி நடத்தப்பட வேண்டும்.

கூட்ட நடைமுறைகளின் போது பெற்றோர் செயலிப் பயன்பாட்டை எவ்வித சிரமங்களும் இல்லாமல் பள்ளித் தலைமையாசிரியர், தலைவர் உள்ளிட்ட குழு உறுப்பினர்கள் அனைவரும் எளிமையாக தீர்மானங்களை பதிவேற்றம் செய்யும் வகையில் பெற்றோர் செயலியானது மறுசீரமைப்பு செய்து மேம்படுத்தப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில்

நடைபெற்ற பள்ளி மேலாண்மைக் குழு கூட்டங்களில் நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்களில் நிறைவடையாத தேவைகள் அவசியம் எனில் மீண்டும் அவற்றைத் தீர்மானமாக நிறைவேற்றி மேம்படுத்தப்பட்ட பெற்றோர் செயலியில் பதிவேற்றம் செய்ய அனைத்து வகைப் பள்ளித் தலைமையாசிரியர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு1-இல் கொடுக்கப்பட்டுள்ள புதிய செயலியில் தீர்மானங்கள் உள்ளீடு செய்வதற்கான விரிவான வழிகாட்டுதல்களை பின்பற்றிட அனைத்து பள்ளி தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்திட மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

## I. கூட்டப் பொருள்கள்:

### 1. மாநில கற்றல் அடைவு ஆய்வு (SLAS) & THIRAN

இந்த ஆண்டு முழுவதும் நடைபெற இருக்கும் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டங்களில் மாணவர்களின் கற்றல் விளைவுகள் (Learning Outcomes) பற்றி அறிந்துகொள்வது அதைப்பற்றி பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தில் உரையாடுவது ஒரு கூட்டப்பொருளாக இணைக்கப்படும்.

**கற்றல் விளைவு (அடைவு) என்றால் என்ன?:**

கற்றல் விளைவுகள் என்பது கற்றல் – கற்பித்தல் செயல்முறையின் விளைவாக, கற்பவர் என்ன அறிந்து கொண்டார்?, என்ன புரிந்துகொண்டார் ? அல்லது அதைப் பின்தொடர்ந்து செய்தது என்ன என்பதை விளக்குவதாகும்.

ஒரு குறிப்பிட்ட பாடத்தை தொடங்குவதற்கு முன் ஓர் ஆசிரியர், அப்பாடத்தில் மாணவர்கள் பெறவேண்டிய அறிவு சார் மாற்றங்களை (நினைவு கூர்தல், புரிதல், பயன்படுத்துதல், பகுத்தாராய்தல், மதிப்பிடுதல், உருவாக்குதல்) இலக்குகளாக நிர்ணயித்து, அவற்றை கற்பித்தல் நடைமுறையாக கையாள்வதாகும்.

**மாநில கற்றல் அடைவு ஆய்வு (State Level Achievement Survey)**

பார்வை -(3)-இல் கண்டுள்ளபடி, அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் **3, 5 மற்றும் 8 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களின் தமிழ், ஆங்கிலம் மற்றும் கணக்கு பாடங்களில் கற்றல் இடைவெளியைக் கண்டறிய** 2025 – பிப்ரவரி மாதத்தில் மாநில கற்றல் அடைவு ஆய்வு நடத்தப்பட்டு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.

**திறன் இயக்கம் (THIRAN)**

பார்வை-(2)-இல் கண்டுள்ள அரசாணையின்படி அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 9-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் தமிழ், ஆங்கிலம் மற்றும் கணிதத்திறன் ஆகியவற்றை மேம்படுத்தும் பொருட்டு "திறன்" (THIRAN - Targeted

**Help for Improving Remediation & Academic Nurturing)** இயக்கமானது ஜூலை மாதம் தொடங்கி 6 மாத காலத்திற்கு செயல்படுத்தப்பட உள்ளது.

இவ்வியக்கமானது எழுத்துக்களை அடையாளம் காணுதல், எளிய சொற்கள் – வாக்கியங்களைப் படித்தல் மற்றும் அடிப்படை எண்கணித செயல்பாடுகளைச் செய்தல் போன்ற கற்றல் விளைவுகளில் **(Basic Learning Outcomes – BLOs)** போதிய அடைவினைப் பெறாத மாணவர்களை அடையாளம் கண்டு, **THIRAN** வகுப்புகளின் மூலம் கற்றல் இடைவெளிகளைப் போக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும், மாணவர்கள் தங்கள் வகுப்பு நிலைக்கேற்ற இன்றியமையாத கற்றல் விளைவுகளை **(Critical Learning Outcomes – CLOs)** அடைவதற்கு ஏற்ற வகையில் சிறப்பு பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

கற்றல் அடைவில் பின்தங்கியுள்ள மாணவர்களை, திறன் திட்டச் செயல்பாடுகளின் வழியாக முன்னேற்றம் அடையச் செய்ய, **பள்ளி மேலாண்மைக் குழு** உறுப்பினர்களின் முழுமையான ஒத்துழைப்பு தேவை. ஆகவே, அனைத்து பெற்றோர்களுக்கும் இதைப் பற்றிய புரிதலை ஏற்படுத்த, கீழ்க்கண்டவாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. மாநில கற்றல் அடைவு ஆய்வில் **பள்ளி பெற்ற தரநிலை** ஒன்றிய, மாவட்ட மற்றும் மாநில அளவில் எந்த இடத்தில் உள்ளது என்ற விவரத்தினை பள்ளி மேலாண்மைக் குழுவில் தெரிவிக்க வேண்டும்.
2. மாநில கற்றல் அடைவுத் தேர்வின் பள்ளியின் தர நிலை அறிக்கை தலைமை **ஆசிரியர் அறையில் ஒட்டப்பட்டுள்ளதை** கூட்டத்தில் தெரிவிக்க வேண்டும்.
3. THIRAN மதிப்பீட்டின் கீழ் அடையாளம் காணப்பட்ட **மாணவர்களின் எண்ணிக்கையை** கூட்டத்தில் தலைமையாசிரியர் தெரிவிக்க வேண்டும்.
4. தரநிலையில் பின்தங்கியுள்ள பள்ளி/மாணவர்கள் கற்றல் அடைவில் முன்னேற்றம் அடைய தலைமையாசிரியர்/ஆசிரியரால் வகுக்கப்படும் திட்டத்துக்கு பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் எவ்வாறு உறுதுணையாக இருப்பது என கலந்துரையாடவேண்டும்.
5. கற்றல் அடைவு முன்னேற்றதிற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க, மாணவர்களின் **பெற்றோர் ஆதரவைப் பெற உரிய விழிப்புணர்வை** ஏற்படுத்த வேண்டும்.
6. மாணவர்களின் கற்றல் அடைவு முன்னேற்றதிற்கு திட்டமிடப்பட்டுள்ள சிறப்பு வகுப்புகளில் அடையாளம் காணப்பட்ட **மாணவர்கள் தொடர்ந்து பங்கேற்க** வேண்டும்

என்பதைப் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் அம்மாணவர்களின் பெற்றோரிடம் பேச வேண்டும்.

7. மாணவர்களின் கற்றலில் அடைந்துள்ள முன்னேற்றத்தினை பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தில் பகிர்ந்துகொண்டு அந்த **மாணவர்களையும், அதற்கு முயற்சித்த ஆசிரியர்களையும் பாராட்டி உற்சாகப்படுத்த** வேண்டும்.
8. ஆறு மாதங்கள் முடிந்த பிறகு மாணவர்களின் கற்றல் அடைவில் ஏற்பட்டுள்ள முன்னேற்ற நிலையின் அடிப்படையில் திறன் இயக்கப் பயிற்சிகளை தொடர்வதற்கு **பள்ளி மேலாண்மைக் குழு** கூட்டத்தில் தீர்மானம் இயற்றி தெரிவிக்கலாம்.
9. கற்றல் அடைவின் முன்னேற்ற நிலையை ஒவ்வொரு மாதமும் நமது **பள்ளி மேலாண்மைக் குழு பெற்றோர் செயலியிலும்** பகிரலாம்.

## (2) எண்ணும் எழுத்தும்

THIRAN இயக்கத்துடன், எண்ணும் எழுத்தும் திட்ட செயல்பாடுகள் மற்றும் கற்றல் விளைவுகளில் மாணவர்களின் முன்னேற்றத்தையும் தொடர்ந்து மதிப்பாய்வு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியில் குழந்தைகளை சத்தமாக வாசிக்க உதவ வீட்டில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடன் தினமும் 10 – 15 நிமிடங்கள் செலவிடக் கேட்டுக்கொள்ளவும், மேலும் தங்கள் குழந்தைகளைத் தவறாமல் பள்ளிக்கு அனுப்புவதையும் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் உறுதிசெய்தல்.

## (3) முன்னாள் மாணவர்கள்

பள்ளியின் முன்னாள் மாணவர்கள் மூலம் பணமாகவோ, பொருளாகவோ பள்ளிக்கு வழங்கப்படும் நன்கொடைகளை "நம்ம ஸ்கூல், நம்ம ஊரு பள்ளி" வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யவதன் மூலம் மட்டுமே பெறமுடியும் என்ற தகவலை உறுப்பினர்களுக்கு தெரிவித்து உறுதிசெய்தல்.

## (4) உள்ளடக்கிய கல்வி

மாவட்ட மாற்றுத்திறனாளி நலத்துறை அலுவலகம் மூலம் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பது குறித்து பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு தெரிவித்தல்.

அனைத்து மாற்றுத்திறனாளி மாணவர்களும் இடைநிற்றலின்றி தொடர்ந்து பள்ளிக்கு வர பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் வழியாக நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

**(5) அனைத்துக் குழந்தைகளும் பள்ளியில் (ACiS)**

குழந்தை திருமணம், குழந்தைப் பாதுகாப்பு, குழந்தை தொழிலாளர் முறைகளால் விடுபட்ட குழந்தைகளை அடையாளம் கண்டு விழிப்புணர்வு நிகழ்வுகளை பள்ளி மேலாண்மைக் குழு மூலமாக நடத்திட திட்டமிடுதல்.

பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் அனைவரும் பள்ளி இடைநிற்றல் தொடர்பாக அரசின் அனைத்து முன்னெடுப்புகளிலும் பங்கேற்பது மற்றும் குழந்தைகளின் பள்ளி இடைநிற்றலுக்கானக் காரணங்களை அறிந்து சரியான தீர்மானங்களை செயலியில் பதிவிடுவது.

SMC உறுப்பினர்கள் தங்கள் ஊரில் இருக்கின்ற பள்ளி செல்லா மற்றும் இடைநின்ற குழந்தைகளைக் கண்டறிந்து மீண்டும் பள்ளியில் சேர்த்திடவும், மற்றும் பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவரும் பள்ளியில் சேர்ந்து படிப்பதை பள்ளித் தலைமையாசிரியர், ஆசிரியர்களுடன் இணைந்து பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் உறுதிசெய்தல்

**(6) நம் ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி**

NSNOP மூலம் அடிக்கடி வழங்கப்படும் பொருட்கள், வகுப்பறைகள், கழிப்பறைகள் கட்டுமானம் மற்றும் புதுப்பிப்பு, வளாக சுவர், தண்ணீர் வசதி (போர் வெல், சம்ப்) செப்டிக் டேங்க், RO தூய்மைப்படுத்தி, ஸ்மார்ட் போர்டு, STEM ஆய்வுகூடம், மேசை மற்றும் நாற்காலி மற்றும் பிற பள்ளியின் தேவைகளை சரியான விகிதத்தில் அளவீடு செய்து பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத் தீர்மானங்களாக நிறைவேற்றி செயலியில் பதிவேற்ற செய்தல்.

**(7) உயர்கல்வி வழிகாட்டி**

பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பு துணைத் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்ற மாணவர்கள் உயர்கல்விக்கும், தேர்ச்சி பெறாத மாணவர்கள் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு (பாலிடெக்னிக்) விண்ணப்பிக்க ஏதுவாக அதற்குரிய தரவுகளை பள்ளித் தலைமையாசிரியர் வழியாக அறிந்து பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், மற்றும் பள்ளி முன்னாள் மாணவர்கள் உதவுதல்.

பெற்றோர் இல்லாத மாணவர்கள் உயர்கல்விக்கு விண்ணப்பிக்கத் தேவையான உதவிகளை பள்ளி மேலாண்மைக் குழு மற்றும் பள்ளி முன்னாள் மாணவர்கள் வாயிலாகச்

செய்தல். மேலும், அவர்கள் உயர்கல்வியில் சேரும் வரை தொடர் கண்காணிப்பு செய்து, மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து தேவையான ஆதரவுகளை வழங்க உதவுதல்.

### (8) பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் (POCSO)

பாலியல் தீங்குகளிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் வகையில் குழந்தைகளிடம் பாதுகாப்பான தொடுதல், பாதுகாப்பற்ற தொடுதல் மற்றும் குழந்தைகளுக்குப் பாலியல் தொந்தரவுகள் குறித்தும் அத்தீங்குகளிலிருந்து குழந்தைகளை பாதுகாப்பது குறித்தும் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தில் விவாதித்து பிரச்சாரங்கள் வாயிலாக மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது.

"மாணவர் மனசு பெட்டி"யில் மாணவர்கள் தங்கள் புகார்களைத் தெரிவிக்கலாம் என்ற விழ்ப்புணர்வு வழங்குதல்.

### (9) 14417 மாற்றும் 1098 உதவி மைய எண்கள்:

பள்ளிக் கல்வித் துறையின் அழைப்பு மைய எண் 14417 மற்றும் குழந்தைகள் உதவி மைய எண் 1098 குறித்த விழிப்புணர்வை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துவது எனத் தீர்மானம் நிறைவேற்றல்.

### (10) போதைப் பொருள் இல்லாத தமிழ்நாடு

ஆரோக்கியமான மாணவர் சமூகத்தை சீரழிக்கும் போதைப் பொருள்கள் பயன்பாடு மற்றும் அவற்றால் ஏற்படும் சமூக சீர்கேடுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் எதிர்கால சமூகம் போதைப் பொருள் பயன்பாடு இல்லாத சமூகமாக உருவாகும்.

a) போதைப் பொருள் விற்போர் சார்ந்த தகவல்களை Drug Free Tamilnadu App-இல் பதிவு செய்திடலாம்.
b) போதைப் பொருள் இல்லா பள்ளி சூழலை உறுதிசெய்வது என தீர்மானம் நிறைவேற்றுதல்.
c) நூறு மீட்டர் தூரத்தில் புகையிலை மற்றும் போதைப் பொருட்கள் தடைசெய்யப்பட்ட பகுதி என உறுதி செய்தல்.

### (11) விளையாட்டில் ஆர்வமுள்ள மாணவர்களை ஊக்குவிப்பது.

மாணவர்களிடையே விளையாட்டை ஊக்கப்படுத்தும் வகையில் பள்ளி வகுப்பு நேரம் முடிந்த பிறகு சிறப்பு விளையாட்டு வகுப்புகள் நடத்திடவும், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் விழிப்புணர்வை எற்படுத்திடவும் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் சில

செயல்பாடுகளை மேற்கொள்வது குறித்து தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். மேலும், விளையாட்டு விடுதிகள் சார்ந்த விவரங்கள் மற்றும் திட்டங்கள் (Sports Quota in Education and in appointments) சார்ந்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

**(12) வாழ்வியல் திறன்களை மேம்படுத்துதல், இதற்கென பள்ளியில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல்.**

பள்ளிகளில் மற்றும் பாடப்புத்தகத்தில் வாழ்வியல் திறன்கள் சார்ந்து செயல்பாடுகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. பெற்றோர்கள் மாணவர்களின் மனநலன், நடத்தை செயல்பாடுகளில் விரும்பத்தக்க மாற்றங்களை ஊக்குவித்து வலுவூட்டல் சார்ந்து விவாதித்தல்.

**(13) மாணவர்களுக்கு வங்கிக் கணக்கில்சேமிப்பு செய்தல் ஊக்குவித்தல்:**

மாணவர்கள் பிறந்தநாள் உள்ளிட்ட முக்கிய நாட்களில் தங்களால் முடிந்த சிறு தொகையினை வங்கிக் கணக்கில் சேமிப்பு செய்வதை ஊக்குவிப்பது என பள்ளிமேலாண்மைக் குழு கூட்டத்தில் கலந்துரையாடி, அதற்கான விழிப்புணர்வை பெற்றோர்களுக்கு ஏற்படுத்துவது என தீர்மானம் நிறைவற்ற வேண்டும்.

## II. வழிகாட்டுதல்கள்

**(அ) பள்ளி மேலாண்மைக் குழுவும், துறை சார்ந்த அலுவலர்களும்:**

a) பள்ளிக் கல்வித் துறை மூலம் தலைமையாசிரியர்களுக்கு அனுப்பப்படும் சுற்றறிக்கை நகலினை பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவருக்கு அளிக்க வேண்டும்.

b) பள்ளிக் கல்வித் துறை அலுவலர்கள் பள்ளியைப் பார்வையிட வருவதைத் தலைமையாசிரியருக்கு தெரிவிக்கும் சூழலில் அதன் விவரங்களைப் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்குத் தலைமையாசிரியர் முன்னதாகத் தெரிவிக்க வேண்டும்.

c) பள்ளிப் பார்வைக்காக பள்ளியைப் பார்வையிடும் உரிய அலுவலர்கள் பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்களுடன் அது குறித்துக் கலந்தாலோசிக்க நேரம் ஒதுக்கப்பட வேண்டும்.

d) பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினரல்லாத வேறு எந்தவொரு நபரும் கூட்டத்தில் பங்கேற்க அனுமதியில்லை.

## III. காணொலிகள்

பள்ளி மேலாண்மைக் குழு சார்ந்த செயல்பாடுகளுக்கானக் காணொலிகள் (Best Practices Videos) வருகைப் பதிவு மற்றும் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் சார்ந்த செயலியின் காணொலிகளுக்கான **QR-Code மற்றும் இணைப்பு** கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| https://bit.ly/SMCSupportvideos | |

மேற்காணும் அனைத்து வழிமுறைகளையும் இணைப்பு 1-இல் கொடுக்கப்பட்டுள்ள புதிய செயலி சார்ந்த வழிமுறைகளியும் பின்பற்றி பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தினை அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் சிறப்பாக நடத்தி உறுப்பினர் வருகை, தீர்மான விவரங்களை பெற்றோர் செயலியில் (TNSED PARENT APP) உள்ளீடு செய்திட பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்திடுமாறு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு :**

1. புதிய செயலியில் தீர்மானங்களை உள்ளீடு செய்வதற்கான வழிகாட்டுதல்கள்
2. பள்ளி மேலாண்மைக் குழு கூட்ட நிகழ்வுகள் அட்டவணை

**மாநிலத் திட்ட இயக்குநருக்காக,**

**பெறுநர்:**

1. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து வகைப் பள்ளிகளின் பள்ளிமேலாண்மைக் குழுவினர்

   (சார்ந்த பள்ளிகளின் தலைமையாசிரியர் வாயிலாக)

**நகல்:**

(1) அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (முதன்மைக் கல்வி அலுவலர்கள் வழியாக)

(2) இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை-6

(3) இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை-6

# இணைப்பு - I

**2022 – 2024 ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தற்போதைய நிலை, மேம்படுத்தப்பட்ட புதிய பெற்றோர் செயலியின் சிறப்பு அம்சங்கள் மற்றும் புதிய செயலியில் தீர்மானங்களை பதிவிடுவாதற்கான வழிகாட்டுதல்கள்:**

குழந்தைகளின் இலவச, கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் (2009) கீழ் அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் அமைக்கப்பட்டு கூட்டமானது மாதந்தோறும் நடத்தப்பட்டு வருகிறது.

பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு 2022 - 24 ஆம் ஆண்டு சிறப்பாக நடைபெற்றது. பள்ளி மேம்பாடு சார்ந்து நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் TNSED Parent App வழியாக பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. பள்ளி மேலாண்மைக் குழுத் தீர்மானங்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ள பெற்றோர் செயலி முக்கியப் பங்காற்றுகிறது.


பள்ளி மேலாண்மைக் குழுவின் தீர்மானங்களை பதிவு செய்யும் பெற்றோர் செயலியின் பயன்பாடு மற்றும் உள்ளீடு செய்வது குறித்து, பள்ளி மேலாண்மைக் குழு மாநில ஒருங்கிணைப்புக் குழுவால் மாவட்டம் , வட்டாரம் மற்றும் பள்ளி அளவில் பயிற்சிகள் கொடுக்கப்பட்டது.

## I. பள்ளி மேலாண்மைக் குழுவின் முக்கிய நகர்வுகள்:

- 2022-ஆம் ஆண்டு நடைபெற்ற SMC மறுகட்டமைப்புக்கான பெற்றோர் விழிப்புணர்வு கூட்டங்களில் 23.2 லட்சம் பெற்றோர் பங்கேற்றனர்.
- மொத்தம் 37,519 அரசுப் பள்ளிகளில் SMC குழுக்கள் மறுக்கட்டமைக்கப்பட்டன.
- ஆகஸ்ட் 2022 முதல் அக்டோபர் 2024 வரை மொத்தம் 19 முறை SMC கூட்டங்கள் நடைபெற்றன. இந்த கூட்டங்களில் சராசரியாக 70% உறுப்பினர்கள் பங்கேற்றுள்ளனர்.
- 35,735 பள்ளிகள், SMC பெற்றோர் செயலியின் மூலம் தீர்மானங்களைப் பதிவு செய்துள்ளனர்
- பள்ளிகளில் இருந்து 2022- ஆம் ஆண்டிலிருந்து இருந்து செயலி வழியாக நமக்குக் கிடைத்த தீர்மானங்களின் மொத்த எண்ணிக்கை 3 லட்சத்திற்கும் மேல் ஆகும்.
- பதிவேற்றப்பட்ட தீர்மானங்கள் மீது சார்ந்து துறைகள் நடவடிக்கை எடுப்பதற்காக கல்வித்துறைச் செயலரிடமிருந்து மாவட்ட ஆட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டது

- தீர்மானங்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் அவற்றின் முன்னேற்றம் குறித்தும் மாவட்ட ஆட்சியர்களிடம் இருந்து முறையாக தகவல் பெறப்பட்டது.
- இதனைத் தொடர்ந்து, தீர்மானங்கள் மீதான நடவடிக்கைளை கண்காணிக்க , மாநில அளவிலான கண்காணிப்பு குழு (SLMC) மற்றும் மாவட்ட அளவிலான கண்காணிப்பு குழு (DLMC) போன்ற குழுக்கள் அமைக்கப்பட்டது .அதற்கான அரசாணை வெளியிடப்பட்டது
- மேலும், மாவட்ட கல்வி மீளாய்வு(DER) கூட்டங்களில், பள்ளி மேலாண்மை குழுவின் தீர்மானங்கள் ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஆட்சியரால் துறைவாரியாக ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. பள்ளியின் தேவைகள் அனைத்தும் மாவட்ட கல்வி மீளாய்வு கூட்டங்களில் விவாதிக்கப்படுகிறது.
- 2024-2026 ஆண்டுகளுக்கான பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்புக்கான பெற்றோர் விழிப்புணர்வு கூட்டம் ஆகஸ்ட் 2, 2024 அன்று தொடங்கி, ஆகஸ்ட் 31, 2024 வரை அனைத்து பள்ளிகளில் மறுகட்டமைப்பு நிறைவடைந்தது. இதில் தமிழ்நாடு முழுவதும் மொத்தம் 18.9 லட்சம் பெற்றோர் பங்கேற்றனர்
- புதிய பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கபட்ட பின்னர் , 2024 அக்டோபர் மாதம், இது வரை பதிவு செய்யப்பட்டிருந்த 3 லட்சம் தீர்மானங்களுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், அதன் முன்னேற்றத்தையும் மற்றும் பள்ளியின் அன்றைய தேவைகளையும் அனைத்து பள்ளி மேலாண்மைக் குழுக்களும் TNSED பெற்றோர் செயலியில் பதிவேற்றம்(status update) செய்தனர்.
- தீர்மானங்களுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அதன் முன்னேற்ற நிலையை (Status Update) TNSED பெற்றோர் செயலியில் பதிவு செய்யும் செயல்பாட்டுக்கு பின்பு 1,92,543 (24.06.2025 இந்த தேதி வரை ) தீர்மானங்கள் நமக்கு கிடைத்தன. இந்தத் தீர்மானங்களில் 1,50,421 தீர்வுகள் காணப்பட்டுள்ளன. இது மொத்தத் தீர்மானங்களில் 78% ஆகும்.
- தீர்மானங்கள் / தேவைகள் மூன்று நிலைகளில் பிரிக்கப்படுகின்றன: பள்ளி அளவில் தீர்வு காணப்பட வேண்டியவை, மாவட்ட அளவில் தீர்வு காணப்பட வேண்டியவை, மாநில அளவில் தீர்வு காணப்பட வேண்டியவை என்று பிரிக்கப்பட்ட பிறகு, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டன.
-

| நிலை | தீர்மானங்களின் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| Resolved | 150421 | 78% |
| Unresolved | 42122 | 22% |




| | தீர்மானங்களின் எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| பள்ளி அளவில் | 60,754 | 91% |
| மாவட்ட அளவில் | 88,694 | 71% |
| மாநில அளவில் | 973 | 71% |

அதன் அடிப்படையில் மாவட்ட நிர்வாகம் மூலம் 71% தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அவற்றில் உதாரணத்திற்கு வேலை செய்து முடிக்கபட்ட/ தீர்வு கண்டு நிறைவு செய்யப்பட்ட சில முக்கியமான தீர்மானங்களின் தொகுப்பு இது

| முக்கியமான தீர்மானங்களின் தொகுப்பு | நிறைவு |
|---|---|
| உயர் மின்னழுத்தக் கம்பிகளை அகற்றுதல் | 562 |
| பழுதடைந்த கட்டடத்தை அகற்றுதல் | 3269 |
| பழுதடைந்த சுற்றுச்சுவரை அகற்றுதல் | 185 |
| புதிய இயற்பியல் ஆய்வகம் | 14 |
| புதிய உயர்-தொழிநுட்ப ஆய்வகம் | 125 |

| முக்கியமான தீர்மானங்களின் தொகுப்பு | நிறைவு |
|---|---|
| புதிய உயிரியல் ஆய்வகம் | 14 |
| புதிய ஒருங்கிணைந்த அறிவியல் ஆய்வகம் | 39 |
| புதிய கணித ஆய்வகம் | 14 |
| புதிய கணினி ஆய்வகம் | 121 |
| புதிய கலை ஆய்வகம் | 16 |
| புதிய கழிப்பறை | 143 |
| புதிய கழிவுநீர்த் தேக்கத் தொட்டி | 237 |
| புதிய குடிநீர் இணைப்பு | 55 |
| புதிய குடிநீர் இணைப்பு - ஊராட்சி | 594 |
| புதிய குடிநீர் இணைப்பு - போர்வெல் | 197 |
| புதிய சுற்றுச் சுவர் | 2675 |
| புதிய நீர் இணைப்பு | 196 |
| புதிய நீர் இணைப்பு - ஊராட்சி | 1074 |
| புதிய நீர் இணைப்பு - போர்வெல் | 572 |
| புதிய மின் இணைப்பு | 120 |
| புதிய மின்சார இணைப்பு | 612 |
| புதிய வகுப்பறை | 1603 |
| புதிய வேதியியல் ஆய்வகம் | 12 |
| போக்குவரத்து வசதிகளை உருவாக்குதல் | 294 |
| மாணவர்களுக்கான புதிய கழிப்பறை | 2009 |
| மாணவிகளுக்கான புதிய கழிப்பறை | 1416 |
| மாற்றுத் திறன் கொண்ட மாணவர்களுக்கான புதிய கழிப்பறை | 109 |
| மாற்றுத் திறன் கொண்ட மாணவிகளுக்கான புதிய கழிப்பறை | 46 |
| மொத்தம் | 16323 |

## II. TNSED புதிய பெற்றோர் செயலி

- கடந்த இரண்டு ஆண்டுகளில் SMC கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட கூட்டப்பொருள் சார்ந்தும், பதிவேட்டில் பதிவான தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்டும் நமக்குக் கிடைத்த அனுபவத்தின் அடிப்படையில், அரசின் துறைகள் பள்ளியின் தேவைகளான தீர்மானங்களை எடுத்து உடனே வேலையைத் தொடங்க , தகவல்களை தெளிவாகப் பெறும் மேம்பட்ட வசதிகளோடு புதிய செயலி தேவை அறியப்பட்டது.
- தலைவர் , HM மற்றும் உறுப்பினர்களின் கருத்துக்களை பரவலாக அறிந்தபோது , பள்ளியின் தேவைகளை செயலி வழியாக பதிவு செய்யும்போது செயலியில் மேம்படுத்த வேண்டியவை பற்றிய கருத்துக்கள் சேகரிக்கப்பட்டது.
- இந்தச் செயலி
    - SMC தலைவர் , HM இருவரும் இணைந்து தீர்மானங்களை செயலியில் பதிய வேண்டுமென்பதால், செயலி பெற்றோர், SMC தலைவர், HM ஆகியோருக்கு எளிதில் புரியும் வகையிலும்,
    - பள்ளியின் அனைத்து தேவைகளையும் ஒரு தொகுப்பாகக் காணும் வகையிலும்,
    - தீர்மானங்கள் மீது துறைகள் நடவடிக்கை எடுக்க ஏதுவான வகையிலும்,

இந்த புதிய பெற்றோர் செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

**TNSED புதிய பெற்றோர் செயலி மற்றும் அதன் சிறப்பு அம்சங்கள்**

புதிய செயலியில் பள்ளியின் தீர்மானங்களைப் பதிவிட, பள்ளியின் தேவைகள் 6 தலைப்புகளாக பிரிக்கப்பட்டது.

1. Emergency (அவசரத்தேவை)
2. மாணவர்கள்
3. கற்றல்
4. நலத்திட்டங்கள், உதவித்தொகைகள்
5. பள்ளி வளாகம்
6. ஆசிரியர்கள், பணியாளர்கள்

    - Emergency தொகுப்பில் இருக்கும் தேவைகளின் பட்டியல்
        - உயர் மின்னழுத்தக் கம்பிகள் (HT Line)

- குறைந்த மின்னழுத்தக் கம்பிகள் (LT Line)
- டிரான்ஸ்பார்மர்
- மின்கம்பம்
- மின் இணைப்பு
- மின் கசிவு - ஷாக் அடிக்கிறது
- எர்த் கம்பி ( Earth wire )
- கட்டிடங்கள் - இடிக்க வேண்டியது
- அறுவை சிகிச்சையை உறுதிசெய்தல்
- பள்ளிச்சூழல் பாதுகாப்பு
- கற்பித்தலுக்கு இடையூறு
- பள்ளி செயல்பட கட்டிடம் இல்லை.
- பள்ளி வளாகத்தை சேதப்படுத்துதல்
- கிணறு குழிகள் - ( மூடி போடுதல் )
- பாம்புகள் நடமாட்டம்
- வனவிலங்கு நடமாட்டம்
- திறந்தநிலை சாக்கடை - பள்ளிக்கு அருகில்
- திறந்தநிலை சாக்கடை - பள்ளிக்கு உள்ளே
- திறந்தநிலை கழிவுநீர்த் தொட்டி - பள்ளிக்கு அருகில்
- திறந்தநிலை கழிவுநீர்த் தொட்டி - பள்ளிக்கு உள்ளே
- திறந்தநிலை ஆழ்துளைக் கிணறு - ( மூடி போடுதல் )
- மழைத்தண்ணீர் தேங்கியுள்ளது
- அருகில் குளம் ,கண்மாய் ( தடுப்பு தேவை )
- பள்ளி முன்பு நெடுஞ்சாலை ( வேகத்தடை தேவை )
- ஆபத்து உருவாக்கும் மரம் , கிளை அகற்றுதல்
- நான்கு வழிச் சாலை - பேருந்து வேண்டும்
- மலைப்பகுதி - பேருந்து வேண்டும்
- காட்டுப்பகுதி - பேருந்து வேண்டும்
- பேருந்து நிறுத்தம் வேண்டும் - பள்ளி அருகே
- பேருந்து பயணத்தில் மாணவர்களுக்கு நெருக்கடிகள்


○ மாணவர்கள் தொகுப்பில் இருக்கும் தேவைகளின் பட்டியல்

- குழந்தைகளின் ஆரோக்கியம்

        - குழந்தைகளின் பாதுகாப்பு
        - போக்குவரத்து வசதிகளை உருவாக்குதல்
    - கற்றல் தொகுப்பில் இருக்கும் தேவைகளின் பட்டியல்
        - கற்பித்தலுக்கு துணை செய்யும் கருவிகள்
        - வகுப்பறை கற்றலுக் கற்பித்தல் பொருட்கள்
    - நலத்திட்டங்கள், உதவித்தொகைகள் தொகுப்பில் இருக்கும் தேவைகளின் பட்டியல்
        - நலத்திட்டங்கள்
        - அரசு அடையாள அட்டை மற்றும் சான்றிதழ்கள்
        - அரசு உதவித்தொகைகள் மற்றும் உதவித்தொகை வழங்கும் தேர்வுகள்
    - பள்ளி வளாகம் தொகுப்பில் இருக்கும் தேவைகளின் பட்டியல்
        - கட்டிடங்கள்
        - தண்ணீர்
        - மின்சாரம்
        - காலை / மதிய உணவு
        - வளாகப் பொருட்கள்
        - பொது வளாகம்
    - ஆசிரியர்கள், பணியாளர்கள் தொகுப்பில் இருக்கும் தேவைகளின் பட்டியல்
        - ஆசிரியர்
        - ஆசிரியர் பாதுகாப்பு
        - பணியாளர்கள் தேவை
        - பயிற்சிகள்
- மேல்கண்ட ஒவ்வொரு தொகுப்பிற்கு உள்ளேயும் அது தொடர்பான தேவைகளின் பட்டியலும் . அதன் தொடர்ச்சியாக உப தேவைகளும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது
- செயலியில் தீர்மானங்களைத் தேட ஏதுவாக Search Option ஆனது தேவைகளைப் பட்டியலிடும் ஒவ்வொரு பக்கத்திலும் இடம்பெற்றுள்ளது
- செயலியில் தீர்மானங்கள் சார்ந்து அனைத்து தகவல்களும் சரியாகவும் முழுமையாகவும் பெறப்படுகிறது

உதாரணத்துக்கு :

புதிய பேருந்து வசதி வேண்டும் என்ற தேவை ( தீர்மானம்) புதிய செயலியில் எவ்வாறு இருக்கிறது ,அதை வரிசையுடன் பதிவு செய்து **submit/சமர்ப்பித்தல்** – வரை செல்லும் படத்தையும் – அது செயலியில் எப்படி காண்பிக்கப்படும் என்ற படத்தையும் கீழே காணலாம்









அதாவது பேருந்து வேண்டும் என்பதை இப்படி மேலே கண்டபடி ஒரே பக்கத்தில் பதிவிட்டு **Submit** கொடுக்க முடியும்.

இன்னொரு உதாரணமாக பள்ளியில் புதிய மாணவிகள் கழிப்பறை என்ற தேவை (தீர்மானம் ) புதிய செயலியில் எவ்வாறு இருக்கிறது , அதை வரிசையுடன் பதிவு செய்து submit/சமர்ப்பித்தல் – வரை செல்லும் படத்தையும் – அது செயலியில் எப்படி காண்பிக்கப்படும் என்ற படத்தையும் கீழே காணலாம்




அதாவது கழிப்பறை வேண்டும் என்பதை இப்படி மேலே கண்டபடி பதிவிட்டு Submit கொடுக்க முடியும்

- செயலியில் பெறப்படும் தீர்மானங்கள், அந்தந்த தேவை சார்ந்து முழு விபரங்களைப் பதிவிட ஏதுவாக இடம்பெற்றுள்ளது
- செயலியில் **தகவலுக்காக மட்டும் பெற்றுக்கொள்ளப்படும்** - என்ற பகுதி இடம் பெற்றுள்ளது . அதாவது ஒரு குறிப்பிட்ட விசயத்தைப் பற்றிய தகவல்களை மட்டும் பெற்றுக்கொள்ளும் பகுதி இது . அவற்றை பதிவிடும் பதிவிடங்கள் இடம்பெற்றுள்ளன.
- தீர்மானங்கள் சார்ந்தும் பள்ளிக்குழந்தைகள் நலன் சார்ந்தும் தேவையான நேரங்களில் ஆர்வத்துடன் தங்கள் நேரத்தை ஒதுக்கி, பள்ளி மேலாண்மைக் குழு உறுபினர்கள் பள்ளிக்காக செய்யும் வேலைகளைப் பற்றி பதிவிடும் "**SMC பங்கேற்று உதவியது** " என்ற option கொடுக்கப்பட்டுள்ளது.
- தேவைகளைப் பெற்றுக்கொண்டோம் என்று சொல்வதோடு , அதன் தரத்தைப் பற்றி கூறும் - அதாவது மதிப்பீடு செய்ய ஏதுவாக options உருவாக்கப்பட்டுள்ளது

- முக்கியமாக குழந்தைகளின் பாதுகாப்பு தொடர்பாக பள்ளி வளாகத்திலும் , அதைச் சுற்றிலும் உடனடியாக சரி செய்ய வேண்டிய தேவைகளை தீர்மானங்களாகப் பதிவு செய்ய , 'Emergency needs - **மிக அவசரமாக சரி செய்ய வேண்டிய தேவைகள்**' என்று தொகுத்து , செயலியில் நுழைந்ததுமே நாம் பார்க்கும் படியாக முதல் தொகுப்பாக வைக்கப்பட்டுள்ளது
- **மிக மிக அவசியமான தேவைகள்** தீர்மானங்களாக இந்த செயலியில் முதல் முறையாக இடம்பெற்றுள்ளது

இப்படி பல புதிய அம்சங்கள் கொண்ட செயலியை பயன்படுத்துவதற்கு வழிகாட்டும் TNSED பெற்றோர் செயலி பற்றிய காணொளித் தொகுப்பு (video manual) மற்றும் வழிகாட்டும் PPT போன்றவை மாநில அலுவலகத்தில் இருந்து வழங்கப்படும்.

## III. புதிய செயலியில் தீர்மானங்களை பதிவிடுவதற்கான முக்கிய வழிகாட்டுதல்கள்:

நடைபெற இருக்கும் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தில் உறுப்பினர்களின் வருகைப்பதிவு மற்றும் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை புதிய செயலியில் உள்ளீடு செய்வதற்கான வழிகாட்டுதல்கள் பின்வரும்வாறு வழங்கப்படுகிறது.

**வருகைப்பதிவு:**

- பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டம் நடைபெறும் அன்றே நமது பெற்றோர் செயலியில் "**உறுப்பினர் வருகை**" என்ற optionஇல் உறுப்பினர்களின் வருகையைப் பதிவிட வேண்டும் .
- எப்போதெல்லாம் பள்ளியில் பள்ளி மேலாண்மை கூட்டம் நடைபெறுகிறதோ அப்போதெல்லாம் தவறாமல் உறுப்பினர்களின் வருகையை செயலியில் பதிவிட வேண்டும்.

**தீர்மானங்கள் உள்ளீடு செய்தல்:**

- பழைய செயலியில் உள்ளீடு செய்யப்பட்டு அந்த தேவை நிறைவேறாமல் (Unresolved) இருப்பின், அவ்வாறான தேவை இன்னும் உங்கள் பள்ளியில் இருந்தால் கூட்டத்தில் புதிதாக தீர்மானம் நிறைவேற்றி அதனை புதிய செயலியில் மீண்டும் பதிவிட வேண்டும்.
- ஆகஸ்ட்-2025 இல் நடைபெற்ற மறுகட்டமைப்பு முதல் தற்போது வரை பல்வேறு பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டு தீர்மானங்கள்

நிறைவேற்றப்பட்டு தீர்மான பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. அவ்வாறான தீர்மானங்களை நடைபெற இருக்கும் கூட்டத்தில் பதிய செயலியில் உரிய தலைப்பு மற்றும் உப தலைப்பின் கீழ் சென்று உள்ளீடு செய்ய வேண்டும்.

- பள்ளி மேலாண்மைக் குழுவின் கூட்டம் நடைபெறும் நாளன்று, உறுப்பினர்கள் பள்ளி வளாகத்தைச் சுற்றி பார்வையிட்டபின், அப்போது கண்டறிந்த தேவைகளை பட்டியலிட்டு உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து சேர்ந்து முடிவெடுத்து செயலியில் தீர்மானங்களாக பதிவு செய்ய வேண்டும்.
- தீர்மானங்களை வெற்றிகரமாக நிறைவேற்ற குறைந்த பட்சம் 50 **சதவிகித** உறுப்பினர்களின் ஆதரவு வேண்டும்
- செயலியில் பதிவிடப்படும் அனைத்து தீர்மானங்களும் பள்ளி மேலாண்மைக் குழுவில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரிவிக்கப்பட வேண்டும்.
- தீர்மானங்களைப் பதிவு செய்யும் போது அதன் விவரங்களை சரியாக பதிவு செய்ய வேண்டும்,
- புகைப்படம் பதிவு செய்ய வேண்டிய தீர்மானங்களுக்கு மிகவும் பொருத்தமான புகைப்படத்தை தேர்வு செய்து பதிவு செய்ய வேண்டும்.
- சில தீர்மானங்களுக்கு "முன்" மற்றும் "பின்" நிலையைக் காட்டும் இரண்டு புகைப்படங்களையும், தேவைப்படும் இடங்களில் மட்டும் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
- தீர்மானங்களுக்கு உரிய தகவல்களை உரிய இடத்தில் பதிவு செய்த பின்பு, மேலும் அதைப் பற்றிய கூடுதல் தகவல்கள் இருந்தால் "விவரிக்கவும் / காரணம்/ விளக்கம்" என்று குறிப்பிட்டு கேட்கப்பட்ட இடங்களில் மட்டும் தட்டச்சு செய்து பதிவு செய்ய வேண்டும்.

**தீர்மானங்களின் நிலையை பதிவு செய்யும் போது (Status update ) செய்ய வேண்டியவை:**

- தீர்மானங்களின் நிலையில் முன்னேற்றம் இருக்கும் போதும், முழுமையாக தேவை பூர்த்தியான பின்பும், நிறைவேறும் போதும், தீர்மான முன்னேற்ற நிலையை உடனுக்குடன் செயலியில் பதிவு செய்யப்பட வேண்டும்.
- தீர்மானங்களாக இயற்றிய தேவைகள் முழுமையாக நிறைவடைந்து, வேலை நடந்து முடிந்தால் மட்டுமே, நிறைவேற்றப்பட்டது என்று செயலியில் பதிவு செய்யவேண்டும்.

***தேவை முழுமையாகப் பூர்த்தியாகாமல் "நிறைவடைந்தது" என்று பதிவு செய்யப்பட்டால், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர் மற்றும் அதிகாரிகளால், தேவை நிறைவடைய எந்த நடவடிக்கைகளையும் எடுக்க முடியாமல் போய்விடும்.***



18/7/25

**இணைப்பு –II**

## பள்ளி மேலாண்மைக் குழு கூட்ட நிகழ்வுகள் அட்டவணை (மாதிரி வழிகாட்டு நெறிமுறைகள்)

| நேரம் மாலை | செயல்பாடு | நடைமுறை | கால அளவு |
|---|---|---|---|
| 3:00 - 3:10 | பள்ளி வளாகத்தைப் பார்வையிடுதல் | ★ கூட்டம் ஆரம்பிக்கும் முன்னர் பள்ளி மேலாண்மைக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் தலைமையாசிரியருடன் இணைந்து பள்ளி வளாகத்தைப் பார்வையிட வேண்டும்.<br>★ வளாகப் பார்வையிடலின் போது மாணவ மாணவியருக்கான கழிவறை வசதிகள், குடிநீர் வசதிகள், சமையல் அறை, சமையல் பொருட்கள் வைப்பறை, நூலகம் மற்றும் விளையாட்டு மைதானம் ஆகியவற்றைப் பார்வையிட்டு தேவைகளை அடையாளம் காணுதல்.<br>★ தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்களுடன் கலந்துரையாடி தேவைகளை அடையாளம் காணுதல். | 10 நிமிடங்கள் |
| 3:10 - 3:15 | ஊக்கமூட்டும் காணொளிகள் திரையிடல் | பள்ளிக் கல்வித் துறையின் வழியாக அதிகாரப்பூர்வமாக வழங்கப்படும் பள்ளி மேலாண்மைக் குழுவின் | 5 நிமிடங்கள் |

| நேரம் மாலை | செயல்பாடு | நடைமுறை | கால அளவு |
| --- | --- | --- | --- |
| | | செயல்பாடுகள் குறித்த ஊக்கமூட்டும் காணொளிகளைத் திரையிடுதல். | |
| 3:15 - 3:20 | வருகைப் பதிவு | உறுப்பினர்களின் வருகை பெற்றோர் செயலியில் பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவரும், தலைமையாசிரியரும் இணைந்து பதிவு செய்ய வேண்டும். | 5 நிமிடங்கள் |
| 3:20 - 4:00 | வரவேற்பு<br>திட்டமிடுதலுக்கான கருப்பொருட்கள் | 1) உறுப்பினர்களை வரவேற்று, கூட்டத்தின் நோக்கத்தை தலைமையாசிரியர் எடுத்துக் கூறுதல்.<br>2) உறுப்பினர்கள் அறிமுகம்<br>3) மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகளில் கொடுக்கப்பட்டுள்ள கூட்டப் பொருள்களையும் ஆலோசித்துத் திட்டமிடுதலுக்கான கூட்டப் பொருளை (Preparing Meeting Agenda) தயாரித்து குழுவில் வாசித்தல்.<br>4) தவிர்க்கவியலாத கூட்டப் பொருள்கள் ஏதேனும் இருப்பின் குழு உறுப்பினர்களிடம் கேட்டறிந்து சேர்த்துக் கொள்ளுதல். | 40 நிமிடங்கள் |

| நேரம் மாலை | செயல்பாடு | நடைமுறை | கால அளவு |
| --- | --- | --- | --- |
| 4:00 - 4:25 | கூட்டப் பொருள் (meeting agenda) மீதான விவாதம்<br><br>தீர்மானங்களை செயலி மற்றும் பதிவேட்டில் பதிவு செய்தல் மற்றும் உறுப்பினர்களின் கையொப்பம் பெறுதல் | • முன்பே தயாரிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கூட்டப் பொருள்கள் (Meeting Agenda) ஒவ்வொன்றாகக் குழுவில் கலந்தாலோசித்து, விவாதித்து உரிய தீர்மானங்களை மேற்கொள்ளுதல்.<br>• ஒருமனதாக அனைத்து உறுப்பினர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்களைத் பள்ளியில் பராமரிக்கப்படும் தீர்மானப் பதிவேட்டில் / செயலியில் பதிவு செய்து வருகை புரிந்த அனைத்து உறுப்பினர்களின் கையொப்பம் பெறுதல் | 25 நிமிடங்கள் |
| 4:25 - 4:30 | கூட்டம் நிறைவு செய்தல் | தலைவர்/தலைமையாசிரியர் கூட்டத்தில் பங்கேற்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றி கூறுதல் | 5 நிமிடங்கள் |